இனிமையான குழந்தைகளே! குழந்தைகளாகிய உங்களிடம் நாடகத்தின் உயர்ந்த ஞானம் இருக்கிறது. இந்த நாடகம் அப்படியே மீண்டும் (ரிப்பீட்) நடைபெறுகிறது என நீங்கள் அறிவீர்கள்.

கேள்வி: இல்லறத்தில் இருப்பவர்கள் பாபாவிடம் கேட்கும் கேள்வி என்ன? பாபா அவர்களுக்கு என்ன ஆலோசனை வழங்குகிறார்?

பதில்: நிறைய குழந்தைகள் பாபா நாங்கள் வேலை செய்யலாமா எனக் கேட்கிறார்கள். குழந்தைகளே! வேலை செய்யுங்கள். ஆனால் இராயலான வேலை செய்யுங்கள் என பாபா கூறுகிறார். பிராமண குழந்தைகள் மது, பீடி மற்றும் சிகரெட் வியாபரம் போன்ற மோசமான வேலைகளைச் செய்யக் கூடாது. ஏனென்றால், இவைகளால் இன்னும் விகாரங்களின் ஈர்ப்பு ஏற்படுகிறது.

ஓம் சாந்தி. ஆன்மீகத் தந்தை ஆன்மீகக் குழந்தைகளுக்குப் புரிய வைத்துக் கொண்டிருக்கிறார். ஒன்று ஆன்மீகத் தந்தையின் வழி, மற்றொன்று இராவணனின் அசுர வழி. தந்தை காட்டும் வழியை அசுர வழி என்று கூற முடியாது. இராவணனை தந்தை என்று கூற முடியாது அல்லவா? அது இராவணனின் அசுர வழியாகும். இப்போது குழந்தைகளாகிய உங்களுக்கு ஈஸ்வரிய வழி கிடைத்துக் கொண்டிருக்கிறது. எவ்வளவு இரவு பகலுக்குமுள்ள வித்தியாசம் இருக்கிறது! ஈஸ்வரிய வழியினால் தெய்வீக குணங்களைத் தாரணை செய்து வந்துள்ளீர்கள் என புத்தியில் தோன்றுகிறது. இதை குழந்தைகளாகிய நீங்கள் மட்டும் தான் அறிகிறீர்கள். வேறு யாருக்கும் தெரியவில்லை. பாபா செல்வத்தை அளிப்பதற்காகத் தான் சந்திக்கின்றார். இராவணனால் மேலும் செல்வங்கள் குறைந்து கொண்டே போகின்றது. ஈஸ்வரிய வழி எங்கே கொண்டு செல்கிறது, அசுர வழி எங்கே கொண்டு செல்கிறது என நீங்கள் அறிகிறீர்கள். அசுர வழி கிடைத்ததிலிருந்து நீங்கள் கீழே விழுந்து கொண்டே வந்துள்ளீர்கள். புதிய உலகத்தில் கொஞ்சம் கொஞ்சமாகதான் விழுகிறீர்கள். எப்படி விழுகிறீர்கள், எப்படி ஏறுகிறீர்கள் என்பதை குழந்தைகளாகிய நீங்கள் புரிந்து கொண்டீர்கள். இப்போது குழந்தைகளாகிய நீங்கள் மீண்டும் சிரேஷ்டமானவர்களாக மாறுவதற்காக ஸ்ரீமத் கிடைத்திருக்கிறது. நீங்கள் சிரேஷ்டமாக மாறுவதற்காக இங்கே வந்துள்ளீர்கள். நாம் மீண்டும் சிரேஷ்ட வழியை எப்படிப் பெறுவோம் என அறிகிறீர்கள். பல முறை நீங்கள் சிரேஷ்ட வழியினால் உயர்ந்த பதவி அடைந்துள்ளீர்கள். பிறகு மறுபிறவி எடுத்து எடுத்து கீழே விழுந்து வந்துள்ளீர்கள். பிறகு ஒரே முறை தான் ஏறுகிறீர்கள். வரிசைக் கிரமத்தில் முயற்சிக்கு ஏற்ப நடக்கிறது. பாபா புரிய வைக்கின்றார். நேரம் ஆகிறது. புருஷோத்தம சங்கமயுகத்திற்குக் கூட துல்லியமாக நேரம் இருக்கிறது அல்லவா! நாடகம் மிகவும் துல்லியமாகவும் நடக்கிறது. மேலும் அதிசயமாக இருக்கிறது. தந்தையை நினைக்க வேண்டும். மேலும் சொத்து அடைய வேண்டும் என்பது குழந்தைகளுக்கு மிக எளிதாகப் புரிகிறது. அவ்வளவு தான் ! ஆனால் முயற்சி செய்கிறார்கள் என்றால் பலருக்கு மிகவும் கடினமாக இருக்கிறது. இவ்வளவு உயர்ந்ததிலும் உயர்ந்த பதவி பெறுதல் அவ்வளவு எளிதாக முடியாது. பாபாவின் நினைவு மற்றும் பாபாவின் சொத்து என்பது மிகவும் எளிதாகும். ஒரு நொடியின் விஷயம் ஆகும். பிறகு முயற்சி செய்து

கொண்டே இருக்கிறார்கள் என்றால் மாயையும் தடைகளை ஏற்படுத்துகின்றது. இராவணனை வெற்றி அடைய வேண்டும். முழு உலகத்திலும் இராவணனின் இராஜ்யம் ஆகும். இப்போது நாம் யோக சக்தியினால் இராவணனை ஒவ்வொரு கல்பத்திலும் வெற்றி அடைந்து வந்துள்ளோம் என புரிந்து கொள் கிறீர்கள். இப்போதும் அடைந்துக் கொண்டிருக்கிறோம். சொல்லித்தரக் கூடியவர் எல்லையற்ற தந்தையாவர். நீங்கள் பக்தி மார்க்கத்தில் கூட பாபா, பாபா ! என கூறிக் கொண்டு வந்துள்ளீர்கள். ஆனால் முன்பு தந்தையை அறியவில்லை. ஆத்மாவை அறிந்திருந்தனர். புருவமத்தியில் மின்னக் கூடிய அதிசயமான நட்சத்திரம்...... எனக் கூறினர். ஆத்மாவை அறிந்திருந்தாலும் தந்தையை அறியவில்லை. எப்படிப்பட்ட விசித்திரமான நாடகம்! ஓ, பரம்பிதா பரமாத்மா (எனக் கூறினர்), நினைத்தனர். ஆனாலும் அவரைப் பற்றி தெரியவில்லை. ஆத்மாவின் தொழிலைப் பற்றியும் தெரியவில்லை. பரமாத்மாவின் தொழிலைப் பற்றியும் தெரியவில்லை. தந்தையே வந்து புரிய வைக்கிறார். தந்தை இல்லாமல் யாரும் புரிய வைக்க முடியாது. அந்த பாகம் யாருக்கும் இல்லை. ஈஸ்வரிய சம்பிரதாயம், அசுர சம்பிரதாயம் மற்றும் தெய்வீக சம்பிரதாயம் என பாடப்பட்டிருக்கிறது. மிகவும் எளிதாக இருக்கிறது. ஆனால் இந்த விசயங்கள் நினைவில் இருக்கட்டும். இதில் தான் மாயை தடைகளை ஏற்படுத்துகிறது. மறக்க வைக்கிறது. வரிசைக் கிரமத்தில் தந்தையை நினைவு செய்து செய்து நாடகம் முடியும் போது, அதாவது பழைய உலகம் முடியும் போது வரிசைக் கிரமத்தில் இராஜ்யம் உருவாகும் என தந்தை கூறுகிறார். சாஸ்திரங்களினால் இந்த விஷயங்களைப் புரிந்து கொள்ள முடியாது. இவர் (பிரம்மா) கீதை போன்றவைகளை நிறைய படித்திருக்கிறார் அல்லவா? இப்போது இதற்கு எந்த மதிப்பும் இல்லை என பாபா கூறுகிறார். ஆனால் பக்தி மார்க்கத்தில் ஆழ்ந்த சுகம் கிடைப்பதால் அதை விடுவதில்லை.

அனைத்திற்கும் ஆதாரம் முயற்சி என நீங்கள் அறிகிறீர்கள். வேலை போன்றவைகள் கூட இராயலாக இருக்க வேண்டும் சிலருடைய வேலைகள் தாழ்ந்ததாக உள்ளது. மது, பீடி, சிகெரெட் போன்றவைகளை விற்கிறார்கள். இந்த வேலை மிகவும் மோசமானது. மது போன்றவை விகாரங்களை ஈர்க்கிறது. மற்றவர்களை குடிகாரராக மாற்றக் கூடிய வேலை நல்லதல்ல. பாபா ஆலோசனை வழங்குகிறார். யுக்தியோடு இந்தத் தொழிலை மாற்றிக் கொள்ளுங்கள். இல்லை யென்றால் உயர்ந்த பதவி அடைய முடியாது. இந்த அழியாத ஞான ரத்தினங்களின் தொழிலைத் தவிர மற்ற அனைத்து தொழில்களிலும் நஷ்டம் தான் என பாபா புரிய வைக்கிறார். வைர வைடூரியங்களின் வியாபாரம் செய்தார். ஆனாலும் நன்மை ஒன்றும் இல்லை. இலட்சாதிபதியாக மட்டும். இந்தத் தொழிலால் என்னவாகிறார்! பாபா கடிதங்களில் கூட எப்போதும் பல கோடி மடங்கு பாக்கியசாலி என எழுதுகிறார். அதுவும் 21 பிறவிகளுக்கு. பாபா மிகவும் சரியாகக் கூறுகிறார் என நீங்கள் புரிந்து கொள்கிறீர்கள். நாம் தான் இந்த தேவி தேவதைகளாக இருந்தோம். இப்போது சக்கரத்தில் சுழன்றுக் கொண்டே கீழே வந்திருக்கிறோம். சிருஷ்டியின் முதல், இடை, கடையை அறிந்து கொண்டீர்கள். ஞானம் பாபா மூலமாகக் கிடைக்கிறது. ஆனாலும் தெய்வீக குணங்களைக் கடைப்பிடிக்க வேண்டும். தன்னைத்தானே சோதித்துக் கொள்ள வேண்டும். தனக்குள் எந்த ஒரு அவகுணமும் இல்லையே? நான் என்னுடைய இந்த சரீரம் என்ற வீட்டை வாடகைக்குக் கொடுத்திருக்கிறேன் என்பதை இந்த பாபாவும் அறிகிறார். இது வீடல்லவா?

இதில் ஆத்மா வசிக்கிறது. பகவானிற்கு நான் வாடகைக் காக வீட்டைக் கொடுத்திருக்கிறேன் என்று மிகவும் பெருமிதம் இருக்கிறது. நாடகத்தின்படி வேறு எந்த வீட்டையும் அவர் எடுப்பதில்லை. கல்பத்திலும் இதே வீட்டைத் தான் எடுக்க வேண்டியிருக்கிறது. இவருக்கு மகிழ்ச்சி ஏற்படுகிறது அல்லவா! ஆனாலும் எத்தனை சண்டை சச்சரவுகளையும் எதிர் நோக்கினார்! இந்த பாபா விளையாட்டாக பாபா, தங்களுக்கு இரதமாகிய தால் எவ்வளவு நிந்தனைகள் அடைய வேண்டியிருக்கிறது என்று சில நேரங்களில் பாபா விற்குக் கூறுவார். அனைவரையும் விட அதிகமான திட்டு எனக்குக் கிடைக்கிறது என பாபா கூறுகிறார். இப்போது உன்னுடைய முறையாகும். பிரம்மாவிற்கு வேறு எப்போதும் திட்டு கிடைக்கவில்லை. இப்போது அவருடைய முறை வந்திருக்கிறது. ரதத்தை கொடுத்திருக்கிறார் என்றால் நிச்சயமாக பாபாவிடமிருந்து உதவியும் கிடைக்கும். இருப்பினும் பாபாவை நிரந்தரமாக நினைக்க வேண்டும். இதில் தான் குழந்தைகளாகிய நீங்கள் இவரை விட அதிக வேகமாகப் போக முடியும். ஏனென்றால், இவர் மீது கூட நிறைய பொறுப்புகள் இருக்கிறது என பாபா கூறுகிறார். நாடகம் என்று விட்டு விடுகிறார். இருப்பினும் சில அம்புகள் பாய்கிறது. இவர் பாவம் மிகவும் நன்றாக சேவை செய்தார். இவர் சங்க தோஷத்தில் கெட்டுப் போய் விட்டார். எவ்வளவு டிஸ்சர்வீஸ் ஆகிறது! இது போன்ற வேலைகளைச் செய்கிறார்கள். அம்பு வருகிறது. அச்சமயம் இதைப் புரிந்துக் கொள்ளவில்லை. இதுவும் நாடகத்தில் நிச்சயிக்கப் பட்டிருக்கிறது. பிறகு தான் இந்த எண்ணம் வருகிறது. இதுவும் நாடகத்தில் நிச்சயிக்கப் பட்டிருக்கிறது அல்லவா? மாயை நிலையைக் கெடுத்து விடுகிறது. நிறைய டிஸ்சர்வீஸ் ஆகிவிடுகிறது. பெண்கள் மீது எவ்வளவு கொடுமைகள் இழைக்கப்படுகிறது! இங்கே தனது குழந்தைகளே எவ்வளவு டிஸ்சர்வீஸ் செய்கிறார்கள்! தனது குழந்தைகளே எதிர்மறையாகப் பேசுகின்றனர்.

பாபா என்ன சொல்கிறார் என்பதை குழந்தைகளாகிய நீங்கள் புரிந்து கொள்கிறீர்கள். எந்த சாஸ்திரத்தைப் பற்றியும் கூறவில்லை. இப்போது நாம் ஸ்ரீமத் படி எவ்வளவு சிரேஷ்ட மாகின்றோம், அசுர வழியினால் எவ்வளவு கீழானவராகிவிட்டோம்! நேரம் தேவைப்படுகிறது அல்லவா? மாயாவுடன் யுத்தம் நடந்து கொண்டே இருக்கும். இப்போது நீங்கள் கண்டிப்பாக வெற்றி அடைய வேண்டும். சாந்தி தாமம், சுகதாமத்தின் மீது நாம் வெற்றி அடைகிறோம் என நீங்கள் புரிந்து கொள்கிறீர்கள். கல்ப கல்பமாக நாம் வெற்றி அடைந்து வந்திருக்கிறோம். இந்த புருúஷôத்தம சங்கமயுகத்தில் தான் ஸ்தாபனையும் அழிவும் நடக்கிறது. இது அனைத்தும் தெளிவாக உங்களின் புத்தியில் இருக்கிறது. உண்மையில் பாபா நம் மூலமாக ஸ்தாபனை செய்விக்கிறார். பிறகு நாமே தான் ஆட்சியும் செய்வோம். பாபாவிற்கு நன்றி கூடக் கூறுவதில்லை. இதுவும் நாடகத்தில் நிச்சயிக்கப் பட்டிருக்கிறது. நானும் இந்த நாடகத்தில் ஒரு நடிகன். நாடகத்தில் அனைவரின் நடிப்பும் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. சிவபாபாவிற்கும் ஒரு பாகம் இருக்கிறது. நமக்கும் ஒரு பார்ட் இருக்கிறது. நன்றி சொல்வதற்கான விஷயம் இல்லை. நான் உங்களுக்கு ஸ்ரீமத் கொடுத்து வழி காண்பிக்கிறேன். வேறு யாரும் காணபிக்க முடியாது என சிவபாபா கூறுகின்றார். யார் வந்தாலும் சதோபிரதானமான புது உலகம் சொர்க்கம் இருந்தது அல்லவா? எனக் கூறுங்கள். இந்த பழைய உலகத்திற்கு தமோபிரதானம் என்று பெயர். பிறகு சதோபிரதானமாவதற்காக தெய்வீக குணங்களைக் கடைப்பிடிக்க வேண்டும். தந்தையை நினைக்க

வேண்டும். மன்மனாபவ, மத்யாஜீபவ என்பதே மந்திரம். நான் தான் சுப்ரீம் (மிக மேலான) குரு என்றும் தெரிவிக்கிறார்.

இப்போது குழந்தைகளாகிய நீங்கள் நினைவு யாத்திரையினால் முழு சிருஷ்டியையும் சத்கதி அடைய வைக்கிறீர்கள். ஜகத் குரு ஒரே ஒரு சிவபாபா தான். அவர் உங்களுக்கு ஸ்ரீமத் கொடுக்கிறார். ஒவ்வொரு 5000 வருடங்களுக்கு பிறகு நமக்கு ஸ்ரீமத் கிடைக்கிறது என நீங்கள் அறிகிறீர்கள். சக்கரம் சுழன்று கொண்டே இருக்கிறது. இன்றைய பழைய உலகம் நாளைய புதிய உலகமாக ஆகிறது. இந்த சக்கரத்தைப் புரிந்து கொள்வது மிகவும் எளிதாகும். ஆனால் இதுவும் நினைவில் இருந்தால் தான் மற்றவர்களுக்குப் புரிய வைக்க முடியும். இதையும் மறந்து போகிறார்கள். யாராவது விழுந்து விடுகிறார்கள் என்றால் ஞானம் அனைத்தும் முடிந்து போகிறது. கலை அனைத்தையும் மாயை எடுத்துக் கொள்கிறது. அனைத்து கலைகளையும் நீக்கி கலைகளற்றவராக்கி விடுகிறது. விகாரத்தில் இவ்வாறு மாட்டிக் கொள்கிறார்கள். அதைப் பற்றிக் கேட்காதீர்கள்!. இப்போது உங்களுக்கு சக்கரம் முழுவதும் நினைவிருக்கிறது. நீங்கள் பல பிறவிகளாக வேசியாலத்தில் இருக்கிறீர்கள். ஆயிரக்கணக்கான பாவங்களைச் செய்து வந்துள்ளீர்கள். அனைவருக்கும் முன்பும் பல பிறவிகளாக நாங்கள் பாவிகள் என்று கூறுகிறீர் கள். நாம் தான் முன்பு புண்ணிய ஆத்மாவாக இருந்தோம், பிறகு பாவ ஆத்மா ஆகிறோம். இப்போது மீண்டும் புண்ணிய ஆத்மாவாக மாறுகிறோம். இப்போது குழந்தைகளாகிய உங்களுக்கு ஞானம் கிடைத்துக் கொண்டிருக்கிறது. பிறகு நீங்கள் மற்றவர்களுக்குக் கொடுத்து தனக்குச் சமமாக மாற்றுகிறீர்கள். இல்லறத்தில் இருக்கும் போது வித்தியாசம் இருக்கிறது அல்லவா! அவர்கள் நீங்கள் புரிய வைக்கும் அளவிற்குப் புரிய வைக்க முடியாது. ஆனால் அனைவரும் விட முடியாது. இல்லறத்தில் இருந்தாலும் தாமரை மலருக்குச் சமமாக மாற வேண்டும் என பாபாவே கூறுகிறார். அனைவரும் விட்டு விட்டு வந்து விட்டால் அவ்வளவு பேரும் எங்கே அமர்வது? பாபா நாலேட்ஜ்ஃபுல் ஆவார். அவர் எந்த சாஸ்திரத்தையும் படிப்ப தில்லை. இவர் சாஸ்திரங்களைப் படித்திருந்தார். என்னை தான் இறை தந்தை, நாலெட்ஜ்ஃபுல் எனக் கூறுகிறார்கள். தந்தைக்குள் என்ன ஞானம் இருக்கிறது என்பது கூட மனிதர்களுக்குத் தெரியாது. இப்போது உங்களுக்கு சிருஷ்டியின் முதல், இடை, கடை ஞானம் இருக்கிறது. பக்தி மார்க்கத்தின் சாஸ்திரங்கள் அனாதி என நீங்கள் அறிகிறீர்கள். பக்தி மார்க்கத்தில் தான் இந்த சாஸ்திரங்கள் தோன்றுகிறது. மலை உடைந்து விட்டால் மீண்டும் எப்படி உருவாக்குவது எனக் கூறுகிறார்கள். ஆனால் இதுவும் நாடகம் அல்லவா? சாஸ்திரம் போன்ற அனைத்தும் அழிந்து போகிறது. பிறகு அந்தந்த நேரத்தில் அவை உருவாகின்றது. நாம் முதன் முதலில் சிவனின் பூஜையை செய்கிறோம் என்பதும் சாஸ்திரத்தில் இருக்கும் அல்லவா? சிவனின் பக்தி எப்படி செய்யப்படுகிறது, எவ்வளவு சுலோகன்களைப் பாடுகிறார்கள். சிவபாபா ஞானக் கடல் என்று மட்டும் நீங்கள் நினைக்கிறீர்கள். அவர் இப்போது நமக்கு ஞானம் கொடுத்துக் கொண்டிருக் கிறார். இந்த சிருஷ்டி சக்கரம் எப்படி சுழல்கிறது என பாபா உங்களுக்குப் புரிய வைத்துள்ளார். சாஸ்திரங்களில் எவ்வளவு நீண்ட காலத்தை காண்பித்து விட்டனர். அவர்கள் கூறிய விதம் ஒரு போதும் நினைவிற்கே வராது. எனவே குழந்தைகளாகிய உங்களுக்குள் எல்லையற்ற தந்தை நம்மை படிக்க வைக்கிறார் என்ற குஷி இருக்க வேண்டும். மாணவர்களுடைய வாழ்க்கை மிக உயர்ந்த வாழ்க்கை என

கூறப்பட்டிருக்கிறது. பகவான் வாக்கு-நான் உங்களை இராஜாக்களுக்கு இராஜாவாக மாற்றுகிறேன். வேறு எந்த சாஸ்திரத்திலும் இந்த விஷயங்கள் இல்லை. உயர்ந்ததிலும் உயர்ந்த பிராப்தி. இது உண்மையில் குரு ஒருவரே. அவரே அனை வருக்கும் சத்கதி அளிக்கிறார். ஸ்தாபனை செய்பவரையும் குரு என்று கூறலாம். ஆனால் அந்த குரு அனைவருக்கும் சத்கதி அளிக்க முடியாது. அவர்கள் தனக்குப் பின்பு அனைவரையும் நடிப்பில் கொண்டு வருகிறார்கள். திரும்பிச் செல்வதற்கான வழியைத் தெரிவிப்பதில்லை. சிவனின் ஊர்வலம் என்று தான் பாடப்பட்டிருக்கிறது, வேறு எந்த குருவினுடையதும் கிடையாது. மனிதர்கள் சிவனையும் சங்கரனையும் ஒன்றாக்கி விட்டனர். சூட்சும வதனவாசி எங்கே? மூலவதனவாசி எங்கே? இருவரும் எப்படி ஒன்றாக முடியும்? இவ்வாறு பக்தி மார்க்கத்தில் எழுதி விட்டனர். பிரம்மா, விஷ்ணு, சங்கர் மூன்று குழந்தைகள் அல்லவா? பிரம்மாவைப் பற்றிக் கூட நீங்கள் புரிய வைக்கலாம். இவரை தத்தெடுத்திருக்கிறார் என்றால் இவர் சிவபாபாவின் குழந்தை அல்லவா? உயர்ந்ததிலும் உயர்ந்தவர் பாபா. மற்றபடி இவர் அவரின் படைப்பு. எவ்வளவு புரிந்து கொள்ள வேண்டிய விஷயம்! நல்லது.

இனிமையிலும் இனிமையான காணாமல் போய் கண்டெடுக்கப்பட்ட செல்லமான குழந்தைகளுக்கு, தாயும் தந்தையுமாகிய பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்தே.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. அழியாத ஞான ரத்தினங்களின் தொழில் செய்து 21 பிறவிகளுக்கு பல கோடி மடங்கு பாக்கியசாலி ஆக வேண்டும். நமக்குள் எந்த அசுர குணமும் இல்லையா? விகாரங்களை உருவாக்கக் கூடிய எந்தத் தொழிலும் நான் செய்ய வில்லையா? என தன்னைத் தானே சோதித்துக் கொள்ள வேண்டும்.

2. நினைவு யாத்திரையிலிருந்து முழு சிருஷ்டிக்கும் சத்கதி அளிக்க வேண்டும். ஒரேயொரு சத்குரு பாபாவின் ஸ்ரீமத் படி நடந்து தனக்குச் சமமாக மாற்றக் கூடிய சேவை செய்ய வேண்டும். மாயை கலைகள் அற்றவராக மாற்றிவிடக் கூடாது. இதில் கவனம் இருக்க வேண்டும்.

வரதானம்: தீமையிலும் நன்மையை அனுபவம் செய்யக்கூடிய நிச்சய புத்தி கவலையில்லாத சக்கரவர்த்தி ஆவீர்களாக!

எது நடந்ததோ நன்றாகவே நடந்தது,நல்லதாகவே இருக்கிறது மேலும் நல்லதுதான் ஆகப்போகிறது என்ற இந்த பழமொழி எப்பொழுதுமே நினைவிருக்கட்டும். தீமையை தீமையின் ரூபத்தில் பார்க்காதீர்கள். ஆனால் தீமையிலும் நன்மையின் அனுபவம் செய்யுங்கள். தீமையிலும் கூட தங்களுக்கான பாடம் படித்து கொள்ளுங்கள். எந்த ஒரு விசயம் வந்தாலும் கூட என்ன ஆகுமோ என்ற இந்த சங்கல்பம் வரக்கூடாது. ஆனால் நல்லதே நடக்கும் என்ற எண்ணமே உடனே வரவேண்டும். நடந்து முடிந்து விட்டது நல்லதே நடந்தது. எங்கு நல்லதே இருக்கிறதோ அங்கு கவலையில்லாத சக்கரவர்த்தியாக இருப்பார்கள். நிச்சயபுத்தி என்பதன் அர்த்தமே கவலையில்லாத சக்கரவர்த்தி.

சுலோகன்: யார் சுயம் மற்றும் பிறருக்கும் (ரிகார்டு) மதிப்பு கொடுக்கிறார்களோ அவர்களுடைய (ரெக்கார்டு) பதிவேடு எப்பொழுதும் சரியாக

இருக்கும்.